*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# திருக்குறள் குமரேச வெண்பா - நீத்தார் பெருமையில் இறையடியவர் பெருமை

நாகஜோதி,செ
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding author: nagajyothi@vvvcollege.org**

**ஆய்வுச்சுருக்கம்**

உலகப்பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளுக்கு இன்று வரை உரைகள் எழுதப்பட்டு வருகின்றன. வையத்துள் வாழ்வாங்கு வாழும்படி அறிவுறுத்தும் திருக்குறள் இன்று வரை ஆராய்ச்சிக்குரிய நூலாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்திருக்குறளில் உள்ளம் ஆட்பட்ட ஜெகவீரப்பாண்டியனார் ஒவ்வொரு குறளுக்கும் கதைகளைக் கூறும் விதமாகத் திருக்குறள் குமரேச வெண்பாவைப் பாடி மிகச் சிறந்த உரை நூலாக்கியுள்ளார். இந்நூலின் மூன்றாவது அதிகாரம் நீத்தார் பெருமை. இவ்வதிகாரக் கருத்துக்களுக்குப் பொருத்தமாக அமைந்துள்ள கதைகள் வழி இறையடியவரின் பெருமையினைக் கூறுவதே இத்தலைப்பின் நோக்கம்.

**குறிப்புச்சொற்கள்: மாணிக்கவாசகரின் மகத்துவம் ,அகத்தியர் ஈசனிடம் கொண்ட அன்பு, பட்டினத்தாரின் பற்றற்ற பாங்கு, பிரம்மச்சாரியின் பெருமை, துறவியின் சக்தி, மேன்மக்களின் மேன்மை.**

**முன்னுரை**

திருநெல்வேலி மாவட்டம் ஒட்டநத்தம் என்னும் சிற்றூரில் பிறந்தவர் ஜெகவீரப்பாண்டியனார். திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர் மீது நீங்காத பற்றுக் கொண்ட ஜெகவீரப்பாண்டியனார் “அந்தப்புத்தகமே என் வாழ்வை இன்புறுத்தி வருகிறது”1 எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் திருக்குறள் மீதும் பரிமேலழகர் மீதும் பற்றுக் கொண்டவர் என உணர முடிகிறது, இத்தகைய ஜெகவீரப்பாண்டியனார் முருகப்பெருமானை விளித்துப் பாடுவதாகத் திருக்குறள் குமரேச வெண்பாவை அமைத்துள்ளார். தெய்வ வணக்கமும் அவையடக்கமும் உள்பட 1332 நேரிசை வெண்பாவால் ஆனது. இக்குமரேச வெண்பாவின் மூன்றாவது அதிகாரத்தின் வழி இறையடியவர்களைப் பெருமைப்படுத்தும் விதத்தில் ஜெகவீரப்பாண்டியனார் கதைகளைச்

சுட்டியுள்ளார். உலகத்தை மழை வளம் பெறச் செய்வது போல் முற்றும் துறந்தோர் மானிடர் வாழ்வை வளம் பெறச் செய்வர். எனவே வான்சிறப்பு அதிகாரத்தின் பின் நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தை வள்ளுவர் வைத்துள்ளார் என்கிறார் ஜெகவீரப்பாண்டியனார். உலகப் பந்தங்களைத் துறந்தவர் நீத்தார் என அழைக்கப்படுவர். கடுவேகம் கொண்ட பெருவெள்ளத்தை எதிர்த்துக் கரை சேர்வது கடினம். அதுபோல் நீண்ட பாசத் தொடர்புகளை அடியோடு நீங்குவதும் கடினம். இத்தகைய மகான்களின் பெருமையைப் பேசுவது நீத்தார் பெருமை என்னும் அதிகாரமாகும். இவ்வதிகாரத்தில் மாணிக்கவாசகர், அகத்தியர், பட்டினத்தார், நம்மாழ்வார், நக்கீரர், கம்பர், பீஷ்மர், சுகர், கபிலமுனி, சடகோபர் ஆகியோரின் மேன்மையை அறிய முற்படுவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

**மாணிக்கவாசகரின் மகத்துவம்**

கல்வி ஞானங்களில் மேன்மை பெற்ற திருவாதவூரார் திருவாசகம் பாடி மாணிக்கவாசகர் என அழைக்கப்பட்டார். சைவ சமயக் குரவர்களில் ஒருவர். திருவாசகமும், திருக்கோவையாரும் பாடிப் பெருமை பெற்ற மாணிக்கவாசகரின் துறவு மேன்மையை வள்ளுவக் கருத்துக்குப் பொருத்தமாகக் கூற நினைத்த ஜெகவீரப்பாண்டியனார்,

“மண்டுபுகழ் மாணிக்க வாசகரின் மாண்பினைநூல்
கொண்டுபுகல் வானேன் குமரேசா - கொண்ட
ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு”2

என்கிறார். இவ்வெண்பா மூலம் மாணிக்கவாசகரின் இறைநெறியினை ஜெகவீரப்பாண்டியனார் உணர்த்தியுள்ளார். பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்த மாணிக்கவாசகர் இளமையிலேயே வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய கலைகள் கற்றவர். மதுரையில் அரசு புரிந்த அரிமர்த்தன பாண்டிய மன்னன் திருவாதவூராருக்கு மந்திரி பதவி கொடுத்து தென்னவன் பிரமராயன் என்ற பட்டம் தந்து சிறப்புச் செய்தான். அரசுப் பணியைச் சிறப்பாகச் செய்து வந்த திருவாதவூராருக்கு மெய்யுணர்வு மிகுந்தது. பாச பந்தங்களைத் துறந்து ஈசன் அருளை நாடி மதுரையை விட்டுச் செல்ல நினைத்தார்; அறிஞர் சிலர் தடுத்தனர், அவர்களிடத்தில் திருவாதவூரார்,

“சுற்றமும் தொடர்பும் நீத்தோம்; துன்பமும் இன்பமும் அற்றோம்;
வெற்றுடல் மானம் தீர்ந்தோம்; வெறுக்கைமேல் வெறுக்கைவைத்தோம்;
செற்றமும் செருக்கும் காய்ந்தோம்; தீவினை இரண்டும் தீர்ந்தோம்;
கற்றைவார் சடையான் கோலம் காட்டியாட் கொண்ட அன்றே”3

என்று கூறியதாகத் திருவிளையாடற்புராணம் வழி உரைத்துள்ளார். இக்கதை மாணிக்கவாசகர் மிகச்சிறந்த ஞானம் பெற்றவர் என்பதையும் அவரது துறவு வாழ்க்கையின் மேன்மையினையும் உணர வைக்கிறது.

**அகத்தியர் ஈசனிடம் கொண்ட அன்பு**

உலகப் பற்றுக்களைத் துறந்த துறவிகள் இறைவன் அருளை அடைவர். இத்தகையோரிடம் அற்புதச் சக்திகள் நிறைந்து காணப்படும். எண்ணரிய மகத்துவமுடைய துறவியரை விண்ணவரும் துதிப்பர். அத்தகையோரின் பெருமையை

அளந்து சொல்வது இறந்தோரைக் கணக்கெடுப்பது போலாகும் என்கிறது குறள். இக்கருத்தினை அகத்தியர் கதை வழி கூற நினைத்த ஜெகவீரப்பாண்டியனார்,

> "பண்டு கடல்பருகிப்பார்சமன்செய் மாதவன்சீர்
> கொண்டதுணை என்னே குமரேசா - கண்டு
> துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
> இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"4

என்கிறார். இவ்வெண்பாவிற்குப் பொருத்தமாக ஜெகவீரப்பாண்டியனார், அகத்தியர் என்பவர் முற்றுத் துறந்த முதன்மையான முனிவர். கும்பத்திலிருந்து தோன்றியதால் கும்பமுனிவர் என்று அழைக்கப்பட்டார். அதிசயமான அரிய தவயோகி. இவரது ஏவலைச் செய்வதற்குத் தேவர்களும் காத்திருந்தனர். அகத்தியர் கடலைப் பருகிய கதையினைத் திருவிளையாடற்புராணத்தின் வழியாக உணர்த்தியுள்ளார் ஜெகவீரப்பாண்டியனார். விருத்திரன் என்னும் அசுரன் இந்திரனோடு பெரும்போர் புரிந்தான். எதிர்கொள்ள முடியாத விருத்திரன் கடலுள் புகுந்து மறைந்தான். அமரர்கோன் வருந்தி அகத்தியரை நாடித் தன் வெற்றிக்கு உதவிபுரியுமாறு வேண்டினான். அகத்தியர் உருத்திர மூர்த்தியைத் தியானித்து ஆழிநீரைக் கையில் ஏந்திப் பருகினார். இந்திரன் வெற்றியடைந்தான் என்பதாக திருவிளையாடற்புராணத்தின் வழி கூறியுள்ளார். மேலும் அகத்தியரின் பெருமையைப் பறை சாற்றும் மற்றொரு கதையானது, உமாபதியின் திருக்கலியாணக் கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு எல்லா உயிர்களும் இமயம் சார்ந்தன. வடதிசை தாழ்ந்தது; தேவர்களும் மாதவர்களும் மயங்கினர்; மேருவும் தளர்ந்தது; சேடனும் கலங்கினான். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன் அகத்திய முனிவரை அழைத்து, முனிவர் திலகமே! நீ தென்திசை சென்று பொதிகையில் நின்றால் இவ்வுலகம் சமமாய் நிலைபெறும்; என்று ஆணையிட்டார். சிவபெருமான் உருவைச் சிந்தித்துக் கொண்டு தென்திசை நோக்கிப் பொதிய மலையை அடைந்தார் அகத்தியர். உலகம் சமமாய் நின்றது. இமயத்தில் திருமணம் இனிதாய் முடிந்தது. தேவர் முதல் யாவரும் இம்மாதவர் மகிமையை வியந்து புகழ்ந்தனர் என்கிறார் ஜெகவீரப்பாண்டியனார். இக்கதை மூலம் ஈசனிடம் பக்தி கொண்ட அகத்தியரின் பேராற்றல் இந்திரனுக்கு பேருதவி செய்ய வைத்தது; இறைவனின் ஆணையை ஏற்றுச் செயல்படச் செய்தது என உணர முடிகிறது.

**பட்டினத்தாரின் பற்றற்ற பாங்கு**

அரிய மானிடப்பிறப்பில் செல்வம் கல்வியை விடப் பெருமையை உரிமையாக்குவது மிகவும் அரிது. அருமையான அந்தப் பெருமை துறவிகளிடம் ஓங்கி இருந்தது. இம்மை, மறுமை என்னும் இரண்டின் கூறுகளைத் தெரிந்து அறநெறியை மேற்கொள்ளும் துறவியரின் பெருமை உயர்ந்ததாகும் என்கிறார் வள்ளுவர். இக்கருத்திற்குப் பொருத்தமாகக் கதை கூற நினைத்த ஜெகவீரப்பாண்டியனார்,

> "பண்டு துறவுகொண்ட பட்டினத்தார் மாண்புலகில்
> கொண்டதுயர் வென்னே குமரேசா - கண்ட
> இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற் றுலகு"5

என்கிறார். இதில் வெளிப்படும் கதையாவது, காவிரிப் பூம்பட்டினத்தின் வணிகர் குலத்திலகர் பட்டினத்தார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் திருவெண்காடர். செல்வ நிலையில் சிறந்த பட்டினத்தார் பெரிய கப்பல் வியாபாரி. பல மரக்கலங்கள் இவருக்கு உரிமையாயிருந்தன. அவை அயல் நாடுகளுக்கும் சென்று வந்தன. அரசரும் விரும்பும் பெரும் பொருள்கள் இவரிடம் நிறைந்திருந்தன. அரிய பல தருமங்களைச் செய்து பெரிய புகழோடு வாழ்ந்து வந்தார். ஒருநாள் ஒரு பெரியவரைக் கண்டார்; அவரை நன்கு உபசரித்தார். அப்பெரியவர் பட்டினத்தாரின் வீட்டில் ஓர் ஓலைச்சீட்டை வைத்து விட்டுப் போனார். அவ்வோலையைக் கண்ட பட்டினத்தார் பிரித்துப் பார்த்தார். அதில் **“காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே”** என்று எழுதியிருந்ததைக் கண்டார். அதன் பொருளையும் இறைவன் அருளையும் நினைந்து உள்ளம் உருகி எல்லாச் செல்வங்களையும் துறந்த பட்டினத்தார். **“காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே”** என்று பாடித்திரிந்தார். இவரது துறவு நிலையை அறிந்த அரசர்களும், முனிவர்களும் அதிசயமடைந்து புகழ்ந்தனர் என்பதாக ஜெகவீரப்பாண்டியனார் கூறியுள்ளார். எனினும் பட்டினத்தார் கதை குறித்து உலகவழக்கில் சொல்லப்படுவதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். சிவபெருமான் அருளால் திருவெண்காடருக்கு ஒரு குழந்தை கிடைத்தது. மருதவாணர் எனப்பெயரிட்டு வளர்த்து வந்தார். இளம்பருவம் எய்திய அம்மகனை கடல்வழி வணிகத்தின் பொருட்டு அனுப்பியிருந்தார் திருவெண்காடர். வணிகம் முடித்து வந்த மருதவாணர் எருவாட்டி நிறைந்த மூட்டையில் ஓலைத்துணுக்கும், காதற்ற ஊசியும் வைத்திருந்தார். அதைக்கண்டு கடும்கோபம் கொண்ட திருவெண்காடர் அவ்வோலையைப் பிரித்துப் பார்த்தார். அதில் காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்றிருந்தது. அதன்பிறகு தன் மாளிகையை விட்டுத் துறவு பூண்டார் என்பதாகச் சொல்லப்படுவதுண்டு என்பது குறிப்பிடத்தக்கது. பட்டினத்தார் இறைவனிடம் கொண்ட பக்தியின் புனிதத்தை உணர வைக்கிறது.

### திருமாலின் அன்புக்கு ஆட்பட்ட நம்மாழ்வார்

மதம் கொண்ட யானையைப் பாகன் அங்குசத்தால் அடக்குவான்; அதுபோல மனக்கட்டுக்குள் அடங்காமல் ஓடித்திரியும் ஐம்புலன்களைத் துறவி தம் அறிவால் தடுத்து நிறுத்துவான். அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளையும் அடக்கி இருப்பவன் பேரின்ப வீட்டைப் பெறுவான் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தினை நிரூபிக்கும் விதத்தில் திருக்குறள் குமரேச வெண்பா,

> “கொண்டபொறி கொண்டொன்றும் கொள்ளாத நம்மாழ்வார்
> கொண்டனர்வீடென்னே குமரேசா - கொண்ட
> உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து” 6

என்கிறது. இவ்வெண்பாவிற்கு ஜெகவீரப்பாண்டியனார் கூறும் கதையாவது, பாண்டி நாட்டில் திருக்குருகூரில் பிறந்த நம்மாழ்வார் வேளாள மரபினர். பிறவியிலேயே ஆன்ம ஞானங்களில்

மேன்மை பெற்ற இவர் கீழான பாச பந்தங்களை வெறுத்து வந்தார். ஆதலால் சடகோபர் என அழைக்கப்பட்டார். மாறன் என்ற பெற்ற இவரது பிறப்பும் வளர்ச்சியும் அதிசயமானவை. இயல்பாகவே உலகப் பற்று இன்றி எவரோடும் பேசாமல் மவுனியாயிருந்து அரிய யோக நிலையில் பதினாறு ஆண்டுகளாக அமர்ந்தேயிருந்தார். பெருமாள் இவரை நம்முடைய ஆழ்வார் என அழைத்தமையால் நம்மாழ்வார் எனப்பட்டார். திருமாலின் பெருமையினை ஆயிரம் பாசுரங்களால் பாடி மகிழ்ந்தார். பிறவி நீங்கிப் பேரின்ப நிலை பெற்ற நம்மாழ்வார் நித்தியமுத்தர் என அழைக்கப்பட்டார் என்பதாக அமைந்துள்ளது. இக்கதை மூலம் திருமாலிடம் நீங்காப் பற்றுக் கொண்ட நம்மாழ்வாரின் பெருமையினை உணர முடிகிறது.

**துறவி வாய்மொழியின் வன்மை**

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக எழுகின்ற ஆசைகளை அடக்க முடியாமல் வழி தவறிச் செல்லும் மனிதனுக்குச் சான்று இந்திரன் ஆவான் என்கிறார் வள்ளுவர். இக்கருத்திற்குப் பொருத்தமாகத் திருக்குறள் குமரேச வெண்பா,

“மாதவத்துக் கோதமன்தன் வாய்மொழியின்
வன்மைஎவர்
கோதகலக் கண்டார் குமரேசா - பூதலத்தில்
ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி”7

என்கிறது. இவ்வெண்பாவில் அமைந்த கதையானது, கோதமர் அதாவது கௌதமர் என்பவர் அரிய பல கலைகளைத் தெளிந்த மாதவர். முனிவர்கள் யாவரும் இவரைப் புனிதராகப் போற்றி வந்தனர். இவருடைய மனைவி பெயர் அகலிகை. அவள் அதிசய அழகுடையவள். அந்தப் பேரழகியைக் கண்டு இந்திரன் பெருமோகம் கொண்டான். அவள்மீது கடுங்காதலோடு நெடுங்காலம் திரிந்தான். ஒருநாள் மாய வஞ்சம் புரிந்தான். விடியல் என்று நினைத்து இடையாமத்தில் எழுந்த கோதமர், நதிக்கு நீராடச்சென்றார். அதன்பிறகு மாதவர் போல வடிவம் கொண்டு வந்த இந்திரன் தந்திரமாய் உள்ளே புகுந்தான். பேதை அகலிகை பேதம் தெரிந்திலள்; தனது கணவன் என்றே நம்பினாள். கள்ளவேடனும் மெள்ள நெருங்கினான்; பள்ளம் பாயும் புனல்போல் உள்ளம் பாய அவன் அந்த நல்லவளை அணைந்தான். நீராடச் சென்ற முனிவர் விடியற்காலம் வரவில்லை என்று தெளிந்தார். தனது மனையில் நிகழும் தீமையை யோகக் காட்சியால் உணர்ந்தார்; விரைந்து மீண்டார். வீட்டுள் நுழைந்தார். இந்திரன் ஒரு பூனையாகி அஞ்சி ஓடினான். என் குடிலில் புகுந்த உனக்கு ஆயிரம் குறிகள் தோன்றும் என்று சபித்தார். அவன் நாணி நைந்து போனான். அகலிகையை நோக்கிய கௌதமர், நீ பொல்லாது புரிந்தாய்! ஆதலால் கல் ஆகுக! என்று சபித்தார். அவள் கௌதமர் காலில் விழுந்து தொழுது, அறியாமல் அரும்பிழை செய்தேன்; இதற்கு ஒரு முடிவை அருளுக என்று அழுது வேண்டினாள். இராமன் திருவடித் துகள் படுமேல் இக்கல் உருவம் நீங்கி நல்லுருவம் பெறுவாய் என்று கருணை புரிந்தார். பின்பு உலக நிலையை வெறுத்து ஒரு வனத்தில் யோக நிலையில் இருந்தார். பிரமதேவன் முதலாகத் தேவர் யாவரும் இந்த

மாதவனிடம் வந்து இந்திரனை மன்னித்தருளும்படி வேண்டினர். சிவபெருமான் மன்மதனை எரித்து நீராக்கியது போல் இந்திரனை நீங்கள் சாம்பலாக்காமல் உயிரோடு விட்டு வைத்தது பெருங்கருணையே என்று வானவர் மாதவரைப் போற்றினர் என்பதாக விநாயகப் புராணம் கூறியுள்ளதை எடுத்துரைத்துள்ளார் ஜெகவீரப்பாண்டியனார். இக்கதை மூலம் உண்மையான துறவியின் சக்தியினை அறிய முடிகிறது.

**பிரம்மச்சாரியின் பெருமை**

ஒருவருடைய பெருமையும் சிறுமையும் அவரவர் செய்யும் செயல்களால் அறிய முடியும். இத்தகையோர் பெரியர், சிறியர் என அழைக்கப்படுவர். ஆரிய செயல்களைச் செய்பவர் அதாவது ஐம்பொறிகளை அடக்கும் சக்தியுடையோர் பெரியர் என்றும் அரிய செயல்களைச் செய்ய மாட்டாதவர் அதாவது ஐம்பொறிகளை அடக்கும் சக்தியில்லாதார் சிறியர் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதத்தில் ஜெகவீரப்பாண்டியனார்,

> "வீடுமனார் மெய்த்தவத்தை மேவினார் சந்தனுவேன்
> கூடினான் காமம் குமரேசா - நாடிச்
> செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்"8

என்கிறார். இவ்வெண்பாவில் அமைந்துள்ள கதையானது, மகாபாரதத்தில் இடம்பெறும் சந்தனு என்பவன், சந்திரகுல வேந்தன். கங்கை என்னும் தெய்வ மகளை மணந்து அரிய போகங்களை நுகர்ந்து அத்தினாபுரத்தை ஆட்சி புரிந்து வந்தான். சந்தனு தன் புதல்வன் தேவவிரதனுக்குப் பல்வேறு கலைகளைக் கற்பிக்கச் செய்து இளவரசனாக்கி மனமகிழ்ந்தான். ஒருநாள் சந்தனு வேட்டைக்குச் சென்றான். அங்கு பரதவர் பதியின் மகள் மச்சகந்தியை மணம் செய்யக்கருதிய அவளது தந்தைக்கு ஒரு தூதுவன் மூலம் அறிவித்தான். அப்பரதவன் தன் மகள் வயிற்றில் பிறக்கும் மகனுக்கு அரசுரிமை தருவதாக மன்னன் உறுதிமொழி தரவேண்டும் என்கிறான். அவ்வுரையைக் கேட்டு வேந்தன் வருந்தி மீண்டான். வேட்டைக்குப் போய் மீண்டு வந்த தந்தை வருந்தியிருப்பதை இளவரசன் தேவவிரதன் உணர்ந்தான். தேர்ச்சாரதி மூலம் அறிந்த தேவவிரதன் மச்சகந்தியின் தந்தையிடம் 'நின் மகளே எனக்குத் தாய்; இந்த அன்னை வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளுக்கே அரச பதவி உரிமையாகும். நான் பிரமச்சாரியாகவே இருப்பேன்.' என்று வாக்குறுதி தந்து மச்சகந்தியை அழைத்து வந்தான். தனது மகன் செய்த செயலைக் கண்டு அரசன் உள்ளம் மகிழ்ந்தான். என்கிறது மகாபாரதம்.

இருபத்தொரு வயதுடைய அரசகுமாரன் மனத்தாலும் மங்கையரை நினையேன் எனக் கடுமையான பிரமச்சரிய விரதம் கொண்டமையால் பீஷ்மர் எனப்பட்டார். கடுமையான விரதத்தையுடையவன் என்பதைப் புலப்படுத்தும் இப்பெயர் தமிழில் வீடுமர் என அழைக்கப்படுகிறது. பெண்ணாசையோடு மண்ணாசையும் ஒருங்கே துறந்த துறவியாய் வாழ்ந்த வீடுமர் செயற்கரிய செய்தமையால் பெரியர் எனப் பெருமை பெற்றார்.

அங்ஙனமின்றி ஐம்புலனில் எளியராய் இழிந்தமையால் சந்தனு சிறியர் எனப்பட்டார் என்பதை மகாபாரதத்தின் வழி உணர்த்தியுள்ளார் ஜெகவீரப்பாண்டியனார். இக்கதை மூலம் பிரம்மசாரியாக வாழ்வோர் பிறருக்காக வாழ்ந்து அவர்களது நன்மையை மட்டுமே சிந்திப்பர் என உணர முடிகிறது.

**துறவியின் சக்தி**

உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களால் நிறைந்தது. மண்ணின் தன்மை நாற்றம், நீரின் நீர்மைச் சுவை, தீயின் தெளிவு ஒளி, காற்றின் கூறு ஊறு, ஆகாயத்தின் நிலை ஓசை ஆகியன ஐம்பூதங்களின் இயல்புகள். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களின் இயல்பு பெற்றவன் மனிதன். ஆகாயத்தின் குணமான ஓசை - செவி, தீயின் குணமான ஒளி - கண், மண்ணின் குணமான நாற்றம் - மூக்கு, நீரின் குணமான சுவை - வாய், காற்றின் குணமான ஊறு - மெய் என்பதாகும். இத்தகைய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்களின் நிலைகளைத் தெளிவாகத் தெரிந்து நடப்பவனிடம் இவ்வுலகம் உள்ளது என்கிறார். வள்ளுவர். இக்கருத்திற்குப் பொருத்தமாகச் ஜெகவீரப்பாண்டியனார்,

> “உற்ற சுகன்பால் உலகொடுங்கி நிற்கஅவன்
> கொற்றமுற்ற தென்னே குமரேசா - முற்றும்
> சுவையொலி ஊறொசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு”9

என்கிறார். இவ்வெண்பாவில் அமைந்துள்ள கதையினைக் காண்போம். சுகன் என்பவர் வியாசருடைய தவப்புதல்வர். அதிசயமான கலை ஞானங்களையுடையவர். இளமையிலேயே தத்துவ சீலராய் விளங்கினார். இவரது மதி நலனையும் மனநிலையையும் வியந்து மாதவர் புகழ்ந்தனர். ஆசை யாதும் இல்லாத நிராசை இவரிடம் இயல்பாகவே இருந்தது. சுகன் உலகைத் துறந்து வனத்தை நோக்கிச் செல்ல நினைத்தார். மகனைப் பிரிந்து வாழ இயலாத வியாசர், “குழந்தாய் சில காலம் இல்லற வாழ்வு வாழ்ந்து அதன்பின் நீ தவம் புரியச் செல்வாயாக. இப்பொழுது செல்ல வேண்டாம்” என்றார். வனத்தை நோக்கிச் சென்ற தன் மகனைப் பின்தொடர்ந்த வியாசர், சுகா சுகா என்று கூவிக்கொண்டே போனார். அவ்வாறு அவர் கூவி அழைக்க, வனத்தில் உள்ள மரம் செடி, கொடிகள் யாவும் ஏன்? ஏன்? என்று எதிர்ஒலி செய்தன. அதிமேதையான வியாசரும் பிள்ளையின் மகிமையை வியந்து உள்ளம் உவந்து நின்றார் எனப்பாகவதம் கூறுவதாக உணர்த்தியுள்ளார் ஜெகவீரப்பாண்டியனார். இக்கதை வழி உண்மையான துறவிக்கு இயற்கையும் அடிபணியும் என உணர முடிகிறது.

**மேன்மக்களின் மேன்மை**

உயிர் இனங்களுள் பேசும் திறம் பெற்ற மனித இனம் சிறப்புடையது. அம்மனித இனம் தூய சிந்தனையோடு தவம் புரிந்தால் தெய்வத்திருவருள் கிடைக்கப்பெறுவர்; அதிசய ஆற்றல் பெற்றிருப்பர். அவர்கள் தம் மனதால் உள்ளம் உவந்து வாழ்த்தினால் நற்பலனும், சினந்தால் அல்லலும் விளையும் என்பர். இத்தகையோரைப் பற்றி வள்ளுவர் நிறைவான ஆற்றல் உடைய

மேன்மக்களின் பெருமையை, அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும் என்கிறார். இக்கருத்திற்குப் பொருத்தமாகச் ஜெகவீரப்பாண்டியனார்

> “காட்டினநக் கீரன்,சீர் கம்பன் பெருமையவர்
> கூட்டுமொழி என்னே குமரேசா - பாட்டில்
> நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்”10

என்கிறார். இவ்வெண்பாவிற்குப் பொருத்தமாகச் ஜெகவீரப்பாண்டியனார் கூறிய கதையாவது, நக்கீரர் என்பவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் வாழ்ந்தவர்; சிறந்த மேதை; பொய்யில் புலவர்; பரம்பொருள் நூலுக்கு அரும்பொருள் கண்டவர். நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்று சிவபெருமானிடம் வாதித்த கல்வி வீரர். தமிழ்ச்சங்கத்தில் தலைமைப் புலவராய்த் திகழ்ந்தவர். அக்காலத்தில் கொண்டான் என்னும் பெயருடைய வடமொழிப்புலவன் அங்கு வந்தான். ஆரியமே சிறந்தது என வாதித்தான். தமிழைத் தாழ்த்திக் கூறினான். அவனைச் சீறி இகழ்ந்த நக்கீரர் அவன் உயிர் துறக்கும்படி பாடினார்.அவன் துள்ளித் துடித்து உயிர் துறந்தான். இறந்ததை அறிந்ததும் நக்கீரர் உள்ளம் இரங்கி அவன் உயிர்த்து வரும் படி, கவி பாடவே அவன் உயிர்பெற்று எழுந்தான். இவரது அதிசய மகிமையை உணர்ந்த சான்றோர் வியந்தனர் என்பதாக அமைந்துள்ளது.

கம்பர் தில்லைக்குச் சென்றிருந்த போது, பாம்பு கடித்து ஒரு வாலிபன் இறந்தான். அவனது பெற்றோரின் துயரினைக் கண்டு உள்ளம் உருகிய கம்பர் கலைமகளைச் சிந்தித்து பாடினார். இறந்து கிடந்த அவன் விரைந்து எழுந்தான். இவரது தெய்வப் புலமையை அறிந்து உலகம் போற்றியது. நிறை மொழியாளர் மகிமையை மறைமொழி உணர்த்திவிடும் என்பதை மேற்கண்ட கதைகளால் அறிய முடிகிறது.

### கடுந்தவத்தின் சக்தி

மலருக்கு மணம் சிறப்பானது போல் உயிர்களுக்கு குணம் சிறப்பானது. அடக்கம், அமைதி, அருள், வாய்மை, தூய்மை, முதலான பண்புகள் நிறைந்திருந்தால் அதிசய மகிமைகள் பெருகும். இத்தகைய நல்ல குணமுடைய சான்றோர் ஒரு நொடிப் பொழுதேனும் வெகுண்டால் காத்தல் அரிது என்கிறார் வள்ளுவர். இக்கருத்திற்குப் பொருத்தமாகச் ஜெகவீரப்பாண்டியனார்

> “வென்றிக் கபிலன் வெகுளியால் ஏன்சகரர்
> குன்றி மடிந்தார் குமரேசா - என்றும்
> குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது”11

என்கிறார். இவ்வெண்பாவில் அமைந்துள்ள கதையினை இராமாயணத்தின் வழி உணர்த்தியுள்ளார் ஜெகவீரப்பாண்டியனார். கபிலமுனிவர் என்ற அரிய தவயோகி பாதாளத்தில் தவம் செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் அயோத்தியை அரசு புரிந்த சகரன் ஓர் அசுவமேத யாகம் செய்யக்கருதினான். அவ்வேள்விக்குரிய முறைப்படி இவ்வுலகத்தை வலம்வரச் செய்யும்படி குதிரையை அனுப்பியிருந்தான். சகரனின் யாகத்திற்குத் தடையாக இந்திரன் தந்திரம் செய்தான். அக்குதிரையைக் கபில முனிவர் தவம் செய்யும் இடத்தில் வைத்துவிட்டுச் சென்றான் இந்திரன். உலகை வலம்வரச்

சென்ற குதிரை மீண்டு வராமையால் அறுபதினாயிரம் சகர புத்திரர்கள் அக்குதிரையைத் தேடிச் சென்றனர். உலகமெங்கும் தேடிய சகரபுத்திரர்கள் பூமியைத் தோண்டி பாதாளத்தை அடைந்தனர். கபிலமுனியின் பக்கத்தில் குதிரை இருப்பதைக் கண்டனர் சகரபுத்திரர்கள். அவர் சூழ்ச்சி செய்ததாக எள்ளி இகழ்ந்தனர். அமைதியாக இருந்தார் கபிலமுனி. ஆனால் சகரபுத்திரர்கள் போர் செய்யக்கருதிச் சீண்டினர். அதுவரை அமைதியாக இருந்த கபிலமுனி ஒரு நொடியில் சகரபுத்திரர்களைச் சாம்பலாக்கினார். ஒற்றர்கள் மூலம் நடந்ததை அறிந்த சகரனின் பேரன் அம்சுமான் கபிலமுனிவரை வணங்கி குதிரையை அழைத்துச் சென்றான் என்கிறது கம்பராமாயணம். கடுந்தவத்தின் கடுமையை மேற்கண்ட கதை உணர்த்துகிறது.

### துறவியின் அன்புள்ளம்

உலக ஆசைகளைத் துறந்து வாழும் துறவியர், எவரையும் அழிக்கவும் ஆக்கவும் வல்லவர்கள். எனினும் அருள்குணம் நிறைந்தவர்கள். தரும நீதியிலிருந்து தவறாதவர்கள். அத்தகையோரை வள்ளுவர், எவ்வகைப்பட்ட உயிருக்கும் அருள் காட்டுவதால் அறவோர் எனப்படுவர் என்கிறார். இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதத்தில் திருக்குறள் குமரேச வெண்பா,

> "பண்டேன் சடபரதர் பல்லுயிர்க்கும் செந்தண்மை
> கொண்டு நடந்தார் குமரேசா - கொண்டாடும்
> அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்"12

என்கிறது. ஜெகவீரப்பாண்டியனார் கூறும் கதையானது, இடபன் என்னும் மன்னனுடைய அருமைப்புதல்வர் சடபரதர். எவ்வுயிரையும் தன்னுயிர் போல் கருதுபவர். நீதி நெறியோடு அரசு புரிந்து வருபவர். ஒருநாள் மாலைப் பொழுதில் புலகர் என்னும் முனிவரோடு கண்டகி என்னும் நதியோரத்தில் உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது சூல் முதிர்ந்த ஒரு மான் தண்ணீர் பருக வந்தது. நீர் பருகும்போது சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டு மான் அஞ்சி ஓடியது. ஓடிய வேகத்தால் அதன் கர்ப்பம் கலங்கிக் குட்டி விழுந்தது. தாவிச் சென்ற மான் உயிர் பிரிந்தது. தாயிழந்த மான் குருளையைக் கண்ட சடபரதர் உள்ளம் உருகினார். மெல்ல எடுத்து அதன் மேனியைத் துடைத்தார். அதை அக்காட்டில் விட்டுவர மனம் இணங்கவில்லை. எனவே தன் அரண்மனைக்கு எடுத்து வந்து அன்போடு வளர்த்தார். அச்சடபரதர் எறும்பு முதலிய சிறு உயிர்களும் தன் காலால் மிதிபடக்கூடாது என்ற எண்ணம் கொண்ட பேரருளாளர். இவர் தம் இறுதிக்காலத்தில் மவுனமாயிருந்ததால் சடபரதர் எனப்பட்டார். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டவர் அந்தணர்; அவரே அறவோர்; அரிய பெரிய தவமுனிவர்களை இவ்வுலகம் கண்டு இன்புறும் என அறிய முடிகிறது.

### தொகுப்புரை

"கதை கதையாம் காரணமாம். காரணத்துல ஊரணியாம். ஊரணியில் ஓலக்குத்தண்ணி. ஓலக்குத்தண்ணிய குடிச்சுப்பாத்தா இனிச்சுக்கிடக்கு" என்ற

நாட்டுப்புறப் பாடலுக்கேற்ப உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் காரணத்தோடு நிகழும். இறைவனிடத்தில் பற்றுக் கொண்ட மானிடர் துறவு மேற்கொண்ட சிறப்பினையும் இவ்வுலக ஆசைகளைத் துறந்து இறைவனே தஞ்சம் எனக் கருதியதையும், அத்தகைய துறவியின் சக்தியையும் நீத்தார் பெருமை அதிகாரத்தின் வழி ஜெகவீரப்பாண்டியனார் உணர்த்தியுள்ளமையை அறிய முடிந்தது.

**அடிக்குறிப்புகள்**

1. ஜெகவீரப்பாண்டியனார்,எனது வாழ்வு - ப.71
2. ஜெகவீரப்பாண்டியனார்- திருக்குறள் குமரேச வெண்பா பா -21
3. மேற்கோள் ப- 120 மேற்கோள் திருவிளையாடற்புராணம
4. மேலது பா -22
5. மேலது பா -23
6. மேலது பா -24
7. மேலது பா -25
8. மேலது பா -26
9. மேலது பா -27
10. மேலது பா -28
11. மேலது பா -29
12. மேலது பா -30